

தமிழகம்

சிறப்பாசிரியர் ※ தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

91/1

தொகுதி - 6 | திருவள்ளுவர் ஆண்டு 2006 (வைகாசி, ஆனி — மே & ஜூன் '75) | பகுதி - 5 - 6



சமய, - இலக்கிய திங்களிதழ் ※ 50 காசு.


அருணகிரி விலாஸ்
சீயக்காய் பவுடர்
காரைக்குடி

PALLAVAN TRANSPORT CORPORATION LTD.

(An Undertaking of the Government of Tamil Nadu)

MADRAS-600 002.

*

HELP

THE CONDUCTOR

Please Tender Exact Fare
and
State Your Destination

R. THILLAINAYAGAM
MANAGING DIRECTOR.

தமிழகம்

சிறப்பாசிரியர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

திருவள்ளுவர் ஆண்டு 2006 வைகாசி

வரவேற்கிறோம்! வாழ்த்துகின்றோம்!

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரின் இந்த ஆண்டு பிறந்தநாள். கருணை இல்லங்களோடு தொடங்குகிறது. குணங்களில் உயர்ந்தது கருணை. அருளின் வெளிப்பாடு கருணை. அருள்நெறி தழீஇய நெஞ்சங்களில் இருந்து கருணை ஊற்றெடுக்கும். சாதாரணக் குடியில் தோன்றி அரசோச்சும் நிலைக்கு உயர்ந்த கலைஞர். சூழ்நிலையால் நலிந்த சமுதாயத்தை மறக்காமல் கருணையை விளக்கும் சமுதாய நலத்திட்டங்களை உருவாக்குகிறார். இந்த ஆண்டு சமுதாயத்திற்கு அவர் தந்த கொடை கருணை இல்லம். ஆம் பழைய திருக்கோயில்களின் வரலாற்றை இன்றைய அறநிலைய அமைச்சர் பாராட்டுதலுக்குரிய கண்ணப்பர் மீண்டும் புதுப்பித்து எழுதுகின்றார் இந்து சமுதாயத்தைப் பாதுகாக்கும் பணிகள் ஒருங்கிணைந்த முறையில் இந்து முத்திரையுடன் செய்யப்படும் என்ற நம்பிக்கையைத் தந்துள்ளார். மண்ணகத்தை மறந்து விண்ணகத் தேவர்போல் எண்ணி, 'நாட்டுத்தேவராக' நடமாடும் சிலர், இந்தத் திட்டம் கண்டு முகம் சுளிக்கலாம். நமக்கு என்ன கவலை? நமது வழி தமிழ் வழி. நமது நெறி தமிழ் தழீஇய நெறி. நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று. ஈந்து அவ்வழி பரமனுக்கு பணிசெய்யும் பாங்கு நம்முடைய பாங்கு. ஒருங்கிணைந்த முறையில் இந்து சமுதாய மேம்பாட்டுப் பணிகளை காலம் தாழ்த்தாது தொடங்குக! குடும்பத்தில் தாய் தந்தை இலாதது இயற்கையாக இருக்கலாம். சமூக அமைப்பால் அதுவும் கடவுளைத் தந்தை தாயாகக்கொண்ட சமூக அமைப்பில்

அனாதைகள் இருப்பது, அல்லற்படுவோர் இருப்பது, அழுவோர் இருப்பது அநீதி! அநீதி! அநீதி! இந்த அநீதியை அகற்றிட கலைஞர் அயராது முயல்கின்றார். அவர்தம் முயற்சியை வரவேற்கின்றோம். வாழ்த்துகின்றோம். கலைஞர் தலைமையில் அமைந்த தமிழக அரசின் முயற்சியால் கோயில்களைத் தழுவிய குடிகளும், குடிகளைத் தழுவிய கோயில்களும் உருவாகட்டும். இத்தகு நல்ல திட்டங்களைத் தரும் கலைஞரின் பிறந்தநாள் ஊழி ஊழி தொடரட்டுமே என்று எண்ணத் தோன்றுகிறது. அவர்தம் கொற்றம் வளரட்டும் என்று இதயம் வாழ்த்துகிறது.

(குன்றக்குடி அடிகளார்)



அருள்நெறித் தந்தை அவர்களின் நான்கு கட்டளைகள்!

—✲—

திருச்சி, இரயில்வே காலனி, இரயில்வே தொழிலாளர் வார வழிபாட்டு அருள்நெறித் திருக்கூட்டத்தின் அப்பரடிகள் விழா 5—6—75 இல் நிகழ்ந்தது. அவ்விழாவில் அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமைச் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். அவ்வமயம் அருள்நெறித் திருக்கூட்டத்தினருக்கு நான்கு கட்டளைகளை அறிவித்தார்கள்.

1 அருள்நெறித்திருக்கூட்ட உறுப்பினர் நாள்தோறும் பெரும் புலவர் காலையில் எழுந்து குளித்துத் திருநீறு அணிந்து கொண்டு குறைந்தது 108 முறை ஐந்தெழுத்தெண்ணுபவராக இருக்கவேண்டும்.

2 சாதிகுல வேறுபாடுகளை என்றைக்கும் எப்பொழுதும் எவ்விடத்தும் தன்னளவில் அகநிலையிலும் புறநிலையிலும் கருதாதவராக இருக்கவேண்டும்.

3 இந்து சமூக முன்னேற்றத்திற்குத் தன் வருவாயில் இயன்ற ஒரு சிறு தொகையை முறையாக ஒப்புரவு நிதியாக அப்பரடிகள் நினைவு இந்து சமூக மேம்பாட்டு நிதிக்குத் திங்கள்தோறும் வழங்கவேண்டும்.

4 நாள்தோறும் இந்து சமூகத் தொண்டும் திருக்கோயில் திருத்தொண்டும் புரிபவராக இருக்கவேண்டும்.

இந்த நான்கு கட்டளைகளையும் அருள்நெறித் திருக்கூட்ட உறுப்பினர்கள் தம் வாழ்வியலாகக் கொண்டு ஒழுகவேண்டும்.

—குன்றக்குடி அடிகளார்.

முருகன் பாமாலை



மாரா.



குன்றக்குடி

திருத்தாண்டகம்

(கவிஞர்கோ, வித்துவான்

பூ. அமிர்தலிங்கன் எம். ஏ.)

1

வானேங்கு பரங்குன்றில் வாழ்வான் தன்னை,
    வள்ளியினைத் தான்தேடி வலியச் சென்று
மானேங்கு தினைப்புனத்தில் மணங்கொண் டானை,
    மலைக்குறிஞ்சி நிலத்தானை, மமகா ரத்தால்
தானேங்கு மாமரமாய்த் தருக்கி நின்ற
    தானவனைக் கொன்றழித்த தலைமை யானைத்
தேனேங்கு மலர்க்கண்ணிச் செச்சை சூடும்
    திருக்குன்றக் குடியானைச் சிந்தை செய்வாம்.

2

திருவண்ணா மலைவளரும் தீபம் தன்னைத்,
    திருச்செந்தூர்க் கரைவளரும் திரண்ட முத்தை
உருவண்ண ஞாயிறென உதித்துத் தோன்றி
    ஊர்ந்துவரும் வினைப்புழுவை ஒழிப்பான் தன்னைக்

கருவண்ணச் சிறைவண்டின் கானம் கேட்டுக்
கண்விழிக்கும் செச்சைமலர்க் கண்ணி சூடித்
திருவண்ண மயிலேறும் செவ்வே ளானைத்
திருக்குன்றக் குடியானைச் சிந்தை செய்வாம்

3

தணிகைமணி எனப்பெயர்கொள் தலைமை யானைத்
தமிழறிந்த புலவர்க்குத் தகுதி நோக்கி
மணியனைய அரும்பொருள்கள் வழங்கு வானை,
மாம்பழத்திற் மாகமிகச் சோபம் காட்டி
அணிவையா புரிப்பழனி ஆண்டி யாகி
அருள்ஞானப் பழமெனவே அறிந்தோர் போற்றும்
திணிஞான பண்டிதனைச் சிறந்து நிற்கும்
திருக்குன்றக் குடியானைச் சிந்தை செய்வாம்.

4

ஏரகத்தில் வளர்வானை, ஈச னார்க்கும்
எழிற்குருவாய் மறைப்பொருளை இயம்பி னானை,
ஊரகத்து மலைதோறும் எளியா னானை
உயர்ஞான வேல்கொள்ளும் உரிமை யானை,
பாரகத்து மாந்தரெலாம் பரவிப் போற்றப்
பங்குனிநாள் உத்திரத்தும் விசாகத் தன்றும்
தேரகத்தே வருவானைச் சீர்த்தி யானைத்
திருக்குன்றக் குடியானைச் சிந்தை செய்வாம்.

5

ஆறெழுத்து மறையானை, ஆன்றோர் சொன்ன
ஆறுபடை வீடுடைய ஆற்ற லானை,
ஆறுதலைத் தரித்தபிரான் அரிதின் பெற்ற
ஆறுமுகம் தனைக்கொண்ட அமரர் கோவை,
ஏறுமயில் வாகனஞ்சேர் இறையை, யாண்டும்
எழில்மலையின் மீதொளிரும் இயற்கை வானை
தேறுதலை எனக்கருளும் சித்தம் கொண்ட
திருக்குன்றக் குடியானைச் சிந்தை செய்வாம்,

6

பன்னிரண்டு புயத்தானை, பசுமை கொஞ்சும்
பழமுதிரும் சோலைமலைப் பாலான் தன்னைத்
துன்னரிய பழனிமலைத் தொடரில் ஏறித்
துறவுநிலைக் கோலத்தில் தோன்றி னானைக்
கன்னெஞ்சக் காரவுணன் கதறி வீழக்
கடல்நடுவே சென்றழித்த கைவே லானைத்
தென்தமிழைக் காத்தருளும் சீலத் தானைத்
திருக்குன்றக் குடியானைச் சிந்தை செய்வாம்.

7

செங்கல்வ ராயனெனும் திருப்பேர் கொண்டு
திருத்தணிகை மலையாருக்கும் தேவ தேவைச்
சிங்கார வடிவேலன் எனவே செப்பச்
சிக்கலிலே வீற்றிருக்கும் தெய்வச் சேயை,
மங்கையொரு பாகருடன் மகிழ்ந்து கூடி
மாநாக கிரியினிலே, வானோர் போற்றச்
செங்கோட்டு வேலவனைச் சிறந்து நிற்கும்
திருக்குன்றக் குடியானைச் சிந்தை செய்வாம்.

8

திருவடிசெந் தாமரைப்பூ, தித்திக் கின்ற
தேனனைந்த தினைமாவே உணவு, செய்ய
உருவடிவோ செங்கதிர்போல் ஒளிரும் வைரம்,
ஓங்கார வடிவேலோ ஒளியின் வெள்ளம்,
ஒருவடிவில் அதோமுகமும் உடனைக் கொண்டிங்
கோராறு முகத்தாலும் உயிர்கட் கெல்லாம்
திருவருளைக் கூட்டுவிக்கும் செவ்வேள் என்னும்
திருக்குன்றக் குடியானைச் சிந்தை செய்வாம்.

9

குன்றனைக் குன்றுதொறும் குடியா னானைக்
குறமகளைப் பணிந்தேத்திக் குரையி ரந்து
நின்றானை, வானோர்கள் நினைந்து போற்ற
நெடுமரமாய் நின்றானின் நெஞ்சைப் போழ்ந்து

வென்றானை, மருதிருவர் உருகி வேண்ட
வெற்றிதந்த வேலானை, தணிகை நோக்கிச்
சென்றானைத் தீயோரைச் சேர தானைத்
திருக்குன்றக் குடியானைச் சிந்தை செய்வாம்

10

இசையானை, மறைப்பொருளை ஈச னார்க்கும்
இசைத்தானை, இசைக்குருகும் இயல்பி னானை,
அசையானைச் சீராகித் தனையு மாகி
அடியாகிப் பாலாகி அசைந்தான் தன்னை,
மிசையானைத் தினைமாவை வள்ளி ஊட்ட
மிசைந்தானை, மெய்ஞ்ஞானப் பிழம்பா னானைத்,
திசையானைத் திறலானைச் செவ்வே ளானைத்
திருக்குன்றக் குடியானைச் சிந்தை செய்வாம்!

19—6—75

குன்றக்குடி
இசைஞானியார் மாதர் சங்க அறிக்கை!

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் சமூகத்திற்கு குன்றக்குடி இசைஞானியார் மாதர் சங்க கன்வீனர் கே. சுப்புலெட்சுமி மிகுந்த வணக்கமாய் எழுதிக்கொண்டது.

நம் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் ஏப்ரல் திங்கள் 23 ஆம் தேதியிலும், மே திங்கள் 5 ஆம் தேதியிலும், மே திங்கள் 25 ஆம் தேதியிலும் மூன்றுமுறை கூட்டம் கூட்டப்பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ சந்நிதானம் அவர்கள் அறிவுரைப்படி வீரமாகாளி அம்பாள் கோவிலில் மழை வேண்டி 11 நாள்கள் பிரார்த்தனை செய்யப்பெற்றது மே திங்கள் 15 ஆம் தேதியுடன் பிரார்த்தனை முடிவுபெற்றது நம் ஊரிலும் நல்ல மழைபெய்து குளங்களும் கண்மாய்களும் நிறப்பிவிட்டன.

ஸ்ரீ வீரமாகாளி அம்பாளுக்குத் தண்ணீர்கட்டி அபிஷேகமும் அர்ச்சனையும் சுண்டல் விநியோகமும் 26-5-75 இல் செய்யப்பெற்றது.

மெம்பர்கள் 30, 35 பேர் பிரார்த்தனையில் தவறுமல் கலந்து பங்கு கொண்டார்கள்.

இப்படிக்கு,
தங்கள் கீழ்ப்படிதலுள்ள
(Sd) K. சுப்புலெட்சுமி
கன்வீனர்.

இலக்கியச் செல்வம்

எளிதில் வழங்குக நீதி!

குன்றக்குடி அடிகளார்

மனித சமூக வாழ்க்கை நுட்பமானது. எளிதில் சமூக வாழ்கை மலர்ந்து விடுவதில்லை ஓரோ வழி மலர்ந்தாலும் சமூக அமைப்பிலிருந்து இழிதற்குரிய குணங்களே மனிதனிடத்தில் மிகுதி. ஓரோவழி அமைந்ததுபோலக் காணப்படும் சமூக அமைப்பில் கூடக்கூர்ந்து நோக்கின் தன்னயத்தின் பாற்பட்டதாகவே இருக்கும். உண்மையான — ஒருமை நலமிக்க இன்பம் தழுவிய சமுதாய அமைப்பு தோன்றுவதற்குரிய சூழ்நிலைகள் மிகுதியாக இல்லை. தன்னிச்சைப் போக்கும், தன்முனைப்பும், தன்னல விழைவும் சமூக அமைப்பிற்கு எதிரான குணங்கள். இன்று எங்கு நோக்கினும் இக் குணக்கேடுகளையே பார்க்கிறோம்.

புகழ் தேவைதான்! அதுதான் வாழ்க்கையின் இலட்சியமும்கூட; ஆயினும் அது பூந்தென்றலாக இருக்கவேண்டும். புயலாக இருத்தல் கூடாது. புகழ் செயற்கையில் படைப்பதன்று. விளம்பரம் வேறு, புகழ்வேறு. இன்று புகழ் என்ற பெயரில் விளம்பரமே நடைபெறுகிறது. ஒருவரால் தூயபயனை அடைந்து துய்த்து மகிழ்பவர்கள் அவர்தம் இன்ப அமைதி நிறைந்த மன நிறைவில் சொல்லும் சொல்லே புகழ். அது பொதிகை மலைத் தென்றலைப்போல் குளிர்ச்சியாக இருக்கும். இருபாலும் இன்பந்தரும்.

இத்தகு உயரிய சமூக அமைப்பினைக் கட்டிக் காப்பாற்றவே தொடக்க நிலையில் சமயம் கருக்கொண்டது. அது தன் கடமையில் வழுவிய நிலையில் அரசு தோன்றியது. அரசும் காலப்போக்கில் வழுவிய நிலையில் மக்கள் தாமே அந்தப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளனர். இதுவே சனநாயக அரசு. அரசு சமூக அமைப்பின் அடித்தளத்தில் தோன்றி சமூக அமைப்பை வழாமல் கட்டிக் காப்பாற்றுவதே ஆகும். இத்தகு அரசின் சிறப்பை வெள்ளைக்குடி நாயனார் என்ற சங்க காலப் புலவர் பாடுகின்றார். சமூக அமைப்பினை முறைப்படுத்தி இயக்குவது அரசு. தனித்தனியே மனிதன் சமூக அமைப்பில் ஒத்திசைந்து வாழத் தவறுவானாகில் அவனை ஒறுத்துச் சமூக நெறியில் நிறுத்துவதே அரசின் தலையாய கடமை. இங்ஙனம் வழிநடத்தும் நெறிக்கே முறை என்று பெயர். நீதி என்றும் குறிப்பிடுவர். நீதி தன்னிலையில் மிகமிக உயர்ந்தது. ஆயினும் நீதியை வழங்குவோர் நீதியை எளிதில் வழங்கவேண்டும். நீதியை வழங்குவோர் நீதி வேண்டி வருவோரிடம் எளிதிற் பழக நீதியை வழங்கிடுதல் வேண்டும். அது நீதியை வேண்டி

நின்றோர்க்கு உரிய பொழுதில் மழை பெய்ததைப்போல் மகிழ்வைத் தரும். ஏன்? எளிதில் நீதியை வழங்கும் அரசன் நீதியை வேண்டி நின்றோர்க்கு 'பருவத்தே பெய்த மழை' போன்றவனாவான்.

இங்ஙனம் நீதி தழைப்பதால் மனம் இன்பத்திலும் அமைதியிலும் தவழ்கிறது. அதனால் ஞாலத்தில் வீசும் வளி வெப்பநிலை மாறிக் குளிர்கிறது. அதனால் மழை பொழிகிறது. நீதியால் மழை பொழிகிறது. மழையால் வளம் பெருகுகிறது வளத்தால் வறுமை மாற்றப்படுகிறது. நீதி காப்பாற்றப்படுகிறது. இங்ஙனம் இயற்கையில் மழை பெய்யாது. வானம் வறக்குமேல் அதற்கு வானிலை காரணமன்று. நீதியே காரணம் என்று சான்றோர் கூறுவர். நாடாளும் மன்னர்க்கு குடை உண்டு. அக்குடை வென்கொற்றக் குடை. குடையின் பயன் வெயிலை மறைப்பதன்று. மக்களின் வருத்தத்தை மாற்றுவதே வென்கொற்றக்குடையின் பயன். மக்களிடம் வருத்தம் வருவதற்குரிய வாயில்கள் பலப்பல. வறுமையும் பிணியும் வருத்தும் தூர்த்தர். வருத்துவர் பகைவர் வருத்துவர். இவ் அனைத்து வருத்தங்களிலிருந்தும். மக்கள் இயல்பாகக் காப்பாற்றப்பட வேண்டும். இங்ஙனம் மக்கட்கு வருத்தம் வாராது பாதுகாப்பது எளிய பணியன்று. விளைவில் போட்டியும் விழுமிய புகழில் இகலும் ஆக்கத்தில் அழுக்காறும் உடையவர்கள் முறைகேடான வழிகளில் அவற்றை அடைய முயல்வர். இத்தகையோர் தாம் வளரமாட்டார்கள். வளர்ந்தவர்கள்மீதே கோள் சொல்வர். அவர்தம் சொற்கேட்பது கொற்றத்தின் பிறப்பினைக் குறைக்கும். நீதியைத் தடுக்கும். ஆதலால் அறந்தரு கொற்றம் பேண விரும்புவோர் கோள் சொல்பவர் கூற்றை கேட்கக்கூடாது. மக்களின் வருத்தம் அறிந்து மாற்ற வேண்டும். நீதியை எளிதில் வழங்கவேண்டும். இங்ஙனம் செய்யின் பகைவரும் அடிபோற்றுவர் கொற்றம் உயரும்.

"...பதனெளி யோரீண்
முறைவேண்டு பொழுதிற்
டுவைவேண்டு பொழுதிற்
பெயல் பெற்றோரே
ஞாயிறு சுமந்த கோடுதிறள்
கொண்மூ
மாக விசும்பின் நடுவுநின்
றாங்குக்
கண்பொர விளங்குநின்
விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றோ
அன்றே வருந்திய
குடிமறைப் பதுவே ...."

புறம்-35.

என்பது வெள்ளைக்குடி நாகனார் பாடல்.



அளவறிந்து வாழ்க!

ஞாலத்தின் நியதி - ஒழுங்கு, அளவில் நடக்கிறது. எதிலும் அளவு. இயற்கையில் பொருந்திக் கிடக்கும் அளவைக் காணின் அகம் மகிழ்கிறது. காலத்தில் பூக்கும் செடிகள், காலத்தில் காய்க்கும் மரங்கள், காலத்தில் கனியும் கனிகள், காலத்தில் முற்றும் கதிர்ச்சாலிகள் காலத்தில் பிழையாது தோன்றும் மகவு அம்மம்மா! என்னே இயற்கையின் விந்தை! காலண்டர்கள், கடிகாரங்கள் காதை கழனிகள் காடுகள் காலத்திற் கடமை செய்கின்றன. காலண்டர்கள், கடிகாரங்கள் மத்தியில் வாழும் மனிதன் காலத்தின் அளவை அறிந்தானில்லை. அவன் அறிந்த ஒரே பருவம் வயதைப் பற்றியதே! இளமை, பிணி, மூப்பு, சாக்காடு! அப் பருவ காலங்களில் இளமையை மட்டும் பயன்படுத்தியதாகக் கருதி வாழ்ந்து முடித்திருக்கிறார்கள். அதன் பயனும் அன்பு அல்ல. நாலு இரண்டு நடு விட்டில் அழுதுகொண்டு கிடக்கின்றன. இரங்கத்தக்க வாழ்க்கை

செல்வம் விந்தையானது. செல்வம் வரும், போகும். எவ்வளவு வருகிறது? எவ்வளவு போகிறது? என்று அறிந்து அவற்றில் எஞ்சும் அளவறிந்து வாழ்தல் வேண்டும். திட்டமிட்ட வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் தேவை. எதைக் கொடுத்தால் உடம்பு வேண்டாம் என்னும். வகை வகையாய் வைத்தாலும் தின்னத்தான் சொல்லும். நண்பகல் ஒரு மணிக்கு முன்பு நாலு விதத்தில் அறுசுவையுடன் உண்டாலும், மூன்று மணிக்கு மேசையை வகைவகையான குண்டான்கள் வந்து பொருந்துகின்றன. ஆம்! மாலைநேரத் தீனி தயாராகிறது. இவர்களையெல்லாம் நம்பித்தானே இஞ்சிமுரப்பாக்காரன் வியாபாரம் செய்கிறான். டாக்டர்கள் படித்துவிட்டு வருகிறார்கள். இவர்கள் எமனுக்கு ஏஜென்சிகள். அளவறிந்து வாழ வேண்டும். உடல் தேவைக்கு உண்ணவேண்டும். ஆசைக்கு உண்ணக் கூடாது. மணிக்கு

திட்டமில்லாதார் வாழ்க்கையில் இந்தக் கேடுகள் பெருகும். அவர்கள் திட்டத்தினை நினைவிற் கொள்ளார். திட்டத்திற் கிசைந்த வாறு செயற்பாள் நினைத்ததைச் செய்வான். அவர்களுக்கு பட்ஷெட் ஸட்ஷீட்டேயாம். இத்தகை யோருக்கு செல்வம் உளபோல. ஒரு தோற்றம். ஆனாலும் செல் வத்தின் கூறுகள் உள்ளழியும். செல்வம் சேராது. ஓரோ வழி சேர்வதுபோலத் தோன்றும். சேர்ந்தாலும் தங்காது. வரவை அறிந்துகொள்க! வரவுக்கும் திட்டம் திட்டுக. பிறிதொருவர் வரவை உள்வரவாக்கிக் கொள் ளாதே! வரவுக்குள் செலவு செய்யத் திட்டம் தீட்டுக! செலவுத் திட்டத்தில் சிக்கனம் தேர்க. பிறர்க்கு பயன்படுமாறு திட்டம் தீட்டுக. இங்ஙனம் வாழின் செல்வம் குறையாது. ஊற்று நீர் போல வளம் சுரக்கும்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை - உளபோல
இல்லாகித் தோன்றிக் கெடும்.



வினா: 1 அனுபவஞானம் பெற வேண்டுமானால் திருவாசகம்—திருமந்திரம் இரண்டு நூல்களையும்-பற்றிக்கொண்டு வாழ்வில் உண்மையாகப்பொருந்த அனுபவிக்கவேண்டுமென்பார் கருத்துபற்றித் தங்கள்கருத்து என்ன?

எடமேலையூர்
பெ. சுப்பிரமணியன்.

பதில்: நூற்றுக்கு நூறு சரி.

வினா: 2 மனிதன் முயன்று தேட வேண்டியது எது?

அர. விசயராகவன்
கவுண்டம் பாளையம்

பதில்: அறிவு!

வினா: 3 "உலவுகள் முன் பிறப்பின் தொடர்ச்சி" – விளக்கம் தருக?

அர. விசயராகவன்
கவுண்டம்பாளையம்

பதில்: ஓரளவு உண்மையே. சிலர் உறவு எந்தச் சூழ் நிலையிலும் பாதிக்கப்படாமல் வாழ்கிறது. ஆதலால் புயலில் வீழாத மரங்கள் வலிமை பெற்றுள்ளதைப் போல இவர்கள் உறவு வலிமை பெற்றிருக்கிறது என்பதே உண்மை.

வினா: 4 "நம்பினார் கெடுவதில்லை"- மெய்ப்பிக்க முடியுமா? சிறு விளக்கம் தருக?

அர. விசயராகவன்
கவுண்டம்பாளையம்

பதில்: முடியும் நம்பிக்கையோடு முயற்சிசெய்து பாருங்கள்.

வினா: 5 "அனுபவங்கள் தான் வாழ்க்கையை அமைக்கின்றன" -உண்மைக் கூற்றா? உங்கள் கருத்தென்ன?

அர. விசயராகவன்
கவுண்டம்பாளையம்

பதில்: உண்மைதான். அனுபவங்களை விடச் சிறந்த ஆசிரியன் கிடையாது.

வினா: 6 இந்து சமூக மேம்பாட்டு வாரியம் அமைக்க வேண்டுமென பேரவை மாநிலமாநாடு தீர்மானித்திருக்கிறது. இந்த வாரியம் அமைந்தால், திருக்கோயில்கள். சமய நிறுவனங்

களின் தனித்தன்மைக்கு ஊறு ஏற்படாதா?

கி. சிவானந்தம்
மதுரை-1

பதில்: எந்த வகையான ஊறும் ஏற்படாது இன்றைய நிலையில் தனித்தனியே சமய நிறுவனங்கள் அந்தந்த வட்டத்தின் தேவையைச் சந்தித்தல் என்பது எளிதன்று. ஆதலால் எல்லாச் சமய நிறுவனங்களிலிருந்தும், அந்தச் சமய நிறுவனங்களின் பொருள் வளத்திற் சேற்ப நிதி வசூலித்து ஒருமுகப்படுத்தப் பெற்று மக்கட் பணி செய்யப்படும். அப்பொழுதுதான் திட்டமிட்ட முறையில் சிக்கனமான வகையில் மேம்பாடான அமைப்பில் சமூகப் பணி மேற்கொள்ள முடியும்.

வினா: 7 சாதி வேற்றுமை அவரவர் விதிவசத்தால் ஏற்படுகிறது என்பது உண்மையா?

ஏ. திருஞானசம்பந்தம்
ஓமாந்தூர்

பதில்: இங்ஙனம் சொல்பவர்களுடைய மூளையை எக்ஸ்ரே பிடித்துச் சோதனை செய்ய வேண்டும். அதன்பிறகு அவரை நாட்டில் நடமாடவிடுவதா? அல்லது கீழ்ப்பாக்கத்தில் கொண்டுபோய்விடுவதா? என்பதை முடிவு செய்யவேண்டும்.

வினா: 8 முதல்வர் அவர்களின் ஒரு கடவுட் கொள்கையைச் சிலர் எதிர்க்கிறார்களே! அது பற்றித் தங்கள் கருத்தென்வி?

எம். மீனாட்சிசுந்தரம்
திருச்சி-2

பதில்: ஆம் தொழில்வழிப்பட்டவர்களும், பக்தி அனுபவம் இல்லாதவர்களும் அங்ஙனம் ஒரு கடவுட் கொள்கையை எதிர்க்கத்தான் செய்வர்! "ஒன்றென்றிரு, தெய்வம்உண்டென்றிரு" என்ற பட்டினத்தார் பாடல் நினைவிற் கொள்ளத்தக்கது. வழிபாட்டில் ஒன்றித்தினைத்து அனுபவிக்க வேண்டுமானால் ஒரு கடவுள் வழிபாடு இன்றியமையாதது. நமது ஆன்றோர்கள் கூட "நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்றும் "நானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்" என்றும் ஒரு கடவுள் நெறியில் நின்று தான் ஓதியுள்ளனர். பழைய முறையில் அறுவகைச் சமய நெறியில் அமைந்த உண்மையும் அதுவே. அறுவகைச் சமைத்த ஒரு கடவுளும் உவந்தறியாதார் ஒரு சமய மாக்க முயன்றதால் ஒரு கடவுள் வழிபாட்டு நெறி பல கடவுள் வழிபாட்டு நெறியாயிற்று. இந்த நிலையில் தோன்றிய திருத்தம், அறுவகைச் சமயத்தோர்க்கு அவ்வப் பொருளாய் நின்றிடும் பரம் பொருள் ஒன்றே என்பதேயாகும்.

அடிகளார் அருள்நெறிப் பாடல் (3)

(புலவர் இ. இராமசாமி, ஒற்றைக் கடை)

(ஏற்ற பண்–இசையில் பாடுக.)

தொடுப்பு

தமிழ்நாடு, தெய்விகப் பேரவை—இந்து
சமயம் வளர்த்திடும்-சீரவை—எங்கள்
தமிழ்நாடு தெய்விகப் பேரவை

எடுப்பு

அமிழ்தான தமிழோடு அருளாளர் உறவோடு
கமழ்கின்ற, தெய்விகக் கருத்தைப் பரப்பிடும் (தமிழ்)

முடிப்பு

பட்டிதொட்டி முதல்—பட்டணம் ஈருக
பல்லாயி ரங்கிளைகள்பல்கிடுஞ்சீராக
ஒட்டியு றவாடுஞ்—சைவவை ணவங்கள்
ஊர் மக்கள் இயக்கமாய் உலவிடுமே எங்கும்
(தமிழ்)

தவத்திரு அடிகளார் தலைமையில் இயங்கிடும்
தமிழ்ச்சமு தாயத்தின் சமத்துவந் துலங்கிடும்
சிவ வைணவக் கோயில் சிறந்தெங்கும் விளங்கிடும்
தென்னகம் பத்திமைத் திருவாலே இலங்கிடும்
(தமிழ் நாடு)



தொழுவதல்லால் கடமையில்லை!

திருச்சக்கரப் பள்ளி தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்டத்திலுள்ள ஓர் இனிய திருத்தலம். காவிரிக் கரையில் அமைந்துள்ள திருத்தலம். காவிரி மலர்களைச் சுமந்து, சலசலவென மணி கொழித்து வளமூட்டும் திருத்தலம். நலமலி கொள்கையாளர் வாழ்ந்த திருத்தலம் நான்மறை வல்லார் நயந்துறையும் திருத்தலம். இறைவன் மகிழ்ந்து உறையும் திருத்தலம் இந்தத் திருத்தலம் திருஞான சம்பந்தர் போந்து வழிபட்ட காலத்தில் வளநகராக விளங்கியிருக்கிறது. இன்று அந்நிலையில் இல்லை

அருளாசிரியர்கள் நினைந்து பாடிய குறிப்புக்கள் இன்றும் மெய்ம்மையாக விளங்குகின்றன. திருஞான சம்பந்தர் காலத்தில் அந்த நலமலி கொள்கையோர்கள் பலர் வாழ்ந்துள்ளனர் நான்மறையோர்கள் வாழ்ந்துள்ளனர் [illegible]ல் வல்லார் வாழ்ந்துள்ளனர் அன்று காட்சியளவிலேயே அத்திருக்கோயில் சைவத் திருத்தலமாக விளங்கியிருந்திருக்கிறது. திருஞானசம்பந்தர் அத்திருத்தலத்தைப் பாடும் பொழுது, 'உறைவிடம் சக்கரப்பள்ளியே' என்று பாடியுள்ளார் இங்ஙனம் பாட என்ன திருவுள்ளக் குறிப்பு? 'சிவபெருமான் உறைகின்ற இடம்' என்று குறிப்பிட்டு சொல்வானேன்? சக்கரப் பள்ளியே என்று தேற்றேகாரம் கொடுப்பானேன்? அன்று அது இலக்கணமாக இருக்கலாம்! அல்லது இசையமைதிக்காகப் பாடியிருக்கலாம்; ஆனால் இன்றோ அங்குச் சிவபெருமான் உறைகின்றானா? என்ற ஐய வினா அங்குப் போனவர்களுக்கு எழும்! திருக்கோயிலைப் பிற சமயத்தார் சூழ்ந்து வாழ்கின்றனர் ஆங்கு இன்று நலமலி கொள்கையாளர் இல்லை நான்மறையாளர் இல்லை. பண்ணாரின் தமிழ் பாடுவாரில்லை வைகலும் மலர் கொண்டு வணங்குவாரில்லை. இந்த விளைவு திருஞான சம்பந்தர் திருப்பாடலால் தோன்றியதா? அல்லது பின் வரு விளைவைத்

திருஞானசம்பந்தர் அருளால் உணர்ந்து பாடினரா? அது மட்டு மல்ல. பாடலை முழுதும் படித்தால் அருமையான செய்திகள் கிடைக் கின்றன.

முப்புரம் பாழ்பட எரிந்த வரலாறு பேசப்படுகிறது. இந்தத் திருக்கோயில் பாழ்பட்ட நிலையில் விளங்குகிறது. பூமி, திருமால், வேதம் ஆகியவை இயைபில்லாத வகையில், தேரும், அம்பும் குதிரையு மாயின முப்புரம் எரித்தற்கு! இத் திருத்தலத்திலும் இயைபில்லாத வகையில் திருவருட் சுற்றிலேயே பிற சமயத்தினர் வாழ்கின்றனர். இன்று திருச்சக்கரப் பள்ளியைப் பார்த்தால், ஈசனார் உறைவிடம் திருச்சக்கரப் பள்ளியேயோ? என்று கேட்கத் தோன்றும். ஆனால் திருஞானசம்பந்தர் "உறைவிடம் திருச்சக்கரப் பள்ளியே" என்று உறுதியாகக் கூறுகின்றார்.

நிலத்தடி நீரை வெளிக் கொணரும் முயற்சியேபோல் திருச் சக்கரப் பள்ளியில் உறையும் எந்தை ஈசன் திருவருளை நாமும் தொழுது வெளிப் படுத்தல் வேண்டும். அந்தவற்றாத, முற்றாத ஆனந்த வெள்ளத்தை-சிவயோ கத்தை ஞாலம் அள்ளிப் பருகி மகிழ்ந்திடும்படி செய்ய வேண்டும். திருச்சக்கரப் பள்ளிக்கு யாத்திரை புறப்படுமின்; எம்பெருமானின் உறைவிடம் அதுவே! சிவநெறி யினைச் சார்ந்தோர் அனைவரும் திருச்சக்கரப் பள்ளியைக் கண்டு தொழுவதல்லால் வேறு கடமை யில்லை என்று கருதிடுக; நம் தலை முறையிலும் நாமும் பாடலாம். "உறைவிடம் திருச்சக்கரப் பள்ளியே" என்று!

பாங்கினன் முப்புரம் பாழ்பட வெஞ்சிலை
வாங்கினர் வானவர் தானவர் வணங்கிட
ஓங்கினர் உமையொரு கூறுடும் ஒலிபுனல்
தாங்கினர் உறைவிடம் சக்கரப் பள்ளியே.
3—27—6.

என்பது திருஞான சம்பந்தர் திருப் பாடல்.

இனையான்குடி மாறர் குறிக்கோள் உடையவர். அவர்தம் சீலமே நம்மவருடைய குறிக்கோளாக அமைய வேண்டும்.

குன்றக்குடி அடிகளார்.



வெண்பாப் போட்டி 28

முடிவு

ஈற்றடி: வெற்றிக் கொடி நாட்டு வேன்

1 தெய்விகப் பேரவைச் சங்கம் வளர்த்திடுவேன்:
உய்யும் இறையருளை நான்பெறுவேன்;— மெய்யாக
நற்றமிழ்த் தொண்டர் நமதடிகள் நன்னெறியில்
வெற்றிக் கொடிநாட்டு வேன்

—கா சௌண்டையா, செயலாளர்,
சாத்தாகோவில்பட்டி, தெய்விகப்பேரவைக்கிளை.

2 பேசுபட நாணப் பெருங்கவசக் கேடயத்தால்
தேசு பொலியங்கச் சீர்படையால்—கூசுமொளி
பெற்றவிழி வாளால் பெருங்காதற் போர்தன்னில்
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

— தமிழ்த்தும்பி, திருச்சி.

3 நம்சமய மேன்மையெலாம் நாட்டிலெங்கும் நாட்டிவந்தே
அம்மைநம் மங்கைக் கரசியைப்போல்—செம்மையுடன்
பெற்றியினைப் பேணிப் பெருமை யுறச்செய்து
வெற்றிக் கொடிநாட்டு வேன்;

—புலவர், சிவ. காயத்ரி, சாயிநாதபுரம்.

4 வாழ்க்கைப்போ ராட்டத்தில் வாள்போற் சுழன்றுழைத்தே
ஆழ்ந்தநன் னேர்மை அருந்துணையோ(டு)— ஏழ்மையெனும்
கற்றைப் பகைப்புலத்தைக் கட்டோடு வேரறுத்து
வெற்றிக் கொடிநாட்டு வேன்

—பி, எசு. வேலன், திருச்சி-9.

5 இந்து சமயத்தின் ஈடில்லாத் தத்துவத்தை
செந்தமிழர் வாழ்க்கைத் திறத்திலே — ஒண்டமிழில்
கற்றிந்த சைவசம யக்குரவர் கன்நெறியில்
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

கே. சவுண்டையா. எல் ஐ ஸி. முகவர்,
பெரியகுளம்.

6 அர்ச்சகனுய் ஆலதற்கு ஆரியன்தான் வாய்த்தவனும்
சர்ச்சை கிளம்புகின்ருர் சாதியனுல — பொற்சிலையே!
சுற்றப் பரம்பரையின் கொற்றத்தை வீழ்த்தியிங்கே
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—குழலினியன், திருச்சி-1

7 இல்லாமை இந்நாட்டில் இல்லா தொழிந்திடவும்
எல்லோரும் இன்புற் றிருந்திடவும்— நல்வினையால்
பற்றற்ற சேவைதனைப் பார்சிறக்க அர்ப்பணித்து
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—பொற்குன்றன், திருச்சி-4

8 வைவதையும் வாழ்த்துதலாய் ஏற்று வருத்தியிடர்
செய்வதையும் ஆற்றியித் தென்னுட்டை — உய்விக்க
முற்றும் உழைத்துப்பொய் மூடத் தனமோட்டி
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

சுவித.. வே. கள்ளிப்பாளையம்.

9 பெருச்சாளி; வௌவால்; பிழையுள்ள பாடல்;
இருக்காமல், கோவில் எழிலாய் —இருப்பதற்கே
முற்றும் பணிபுரிந்தே முன்னின்று தொண்டருடன்
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—து. சுப்பராயலு, பி. ஏ., பெரியகுளம்.

10 கண்பிதுங்கப் பார்க்கின்ருர்; கைகள் முறிக்கின்ருர்;
பெண்விதவை காதலன்பால் பேசுங்கால்:— பண்பிதுவோ?
பத்தியுள்ளகை வாழ்வேன் பகுத்தறிவுக் கொள்கைக்கு
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

சா. நடராசன், சென்னை-12.

11 கற்ற பெரியோர்கள் காட்டிய பாதையில்
சற்றும் பிறழாமல் நின்றபின்— பற்றிய
சுற்றம், சுயநலம் விட்டுக் கொடுத்துநல்
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—எம். ஆர். சத்யநாராயணன்,
சென்னை-33.

12 ஆண்டவனைத் தொட்டு யருச்சித்தே உள்ளத்தில்
மூண்டபெரும் ஆர்வத்தால் முத்தமிழில்— வேண்டிடுயோர்
உற்ற செயலை ஒருநாளிற் செய்துநான்
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—அரங்க. முத்துமணி, அரியலூர்.

13 காழிப் பதியின் கவுணியனும் நீடலைசேர்
ஆழி தனில்மிதந்த அப்பருமிவ்— வூழிசிறப்
புற்றிருக்கப் பாடியசீர் ஓங்கு தமிழ்காத்தே
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

சோ. சுவாமிநாதன், திருவீழிமிழலை.

14 காய்த்துக் குலுங்கும் கனிமலர்ச் சோலையாம்
தாய்த்தமிழை, நாட்டைத்தன் மானத்தை— நோய்மதியர்
இற்றைநாள் ஒல்லுமோ ஏய்த்தழிக்க? ஆண்மையினால்
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—ப. சக்திவேலன், கொட்டப்பட்டு-திருசசி.

15 தெய்விகப் பேரவையால், தேயும் தமிழினத்தை
உய்விக்கும் *தந்தை உரைகேட்டு— மெய்யன்பால்
பொற்கமல பாதத்தைப் போற்றி அவர்நெறியால்
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

*தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார்.
—கவிதாயு, பொன்மலை.

16 உண்பொருட்கள் அத்தனையும் ஊருக் களிக்காமல்
மண்ணாகழ்ந்து கேடர் மறைத்துவப்பர்—மன்பதைக்குக்
குற்றம் இழைப்பாரைக் கூண்டோடு வீழ்த்தியே
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

அனகை, நா. சிவன், மயிலாப்பூர்,

17 பொங்கும் தமிழுணர்வு, பொற்றமிழில் நற்புலமை
துங்கமணித் தொண்டர் 'சுகிசிவம்'— பொங்கருவிச்
சொற்பெருக்கின் உண்மை நெறிநின்றே நம்சமய
வெற்றிக் கொடிநாட்டு வேன்

கா. சௌண்டையா, ஆசிரியர்
சாத்தாகோவில்பட்டி.

18 பாலைவன வாழ்வைப் பசுஞ்சோலை யாக்கிடுவேன்:
வேலையற்ற வீணர்சொல் வேரறுப்பேன் —மூலைவாழ்
பொற்சிலையாம் நல்விதவை பூச்சூட வாழ்வுதந்து
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—பொன். மாதவன், பி ஏ
சென்னை–12.

19 ஒப்பில் சமநிலையால் ஓங்கும் சமுதாயம்
இப்போதே தோன்ற எழுச்சியுடன்— இப்பாரைப்
பற்றி வதைக்கும் பணப்பேயை வீழ்த்தியே நான்
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—ஆண்டாள் தாயுமானவன், பொன்மலை.

* 20 நாட்டின் நலிவகற்ற நாத்திகத்தை வேரறுக்கப்
பாட்டில் இறைநெறியைப் பாடுவேன்—வேட்கையுடன்
முற்றிச் செழித்திருக்கும் மூடத் தனமொழித்து
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—சண்முக தாயுமானவன், திருச்சி–8.

21 சைவ நெறிபரப்பும் இந்து சமயத்தின்
தெய்விகப் பேரவை மாநிலமா நா(டு)ஈந்த
நற்றமிழ்ச் சான்றோர்தம் நன்னெறியில் நின்று நான்
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—கா. பவுன், ஆசிரியர்
எருமலைநாயக்கன்பட்டி.

22 நாத்திக வாதத்தை நாடாமல் போக்கிவிட
ஆத்திகம் ஓங்கும் முறையுரைப்பேன்— தோத்திரம்செய்
நெற்றிக்கண் ணூல்தினம் நெஞ்சாரப் பேசிவிட்டு
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—வெ. ம. கேசவன், வெள்ளம்பாக்கம்

23 தெய்வ நலங்கமழத் தென் தமிழின் சீர்விளங்கச்
சைவ நலன் ஓங்கிச் சால்புயா— வையகத்தின்
சுற்றம் அகல அருள்நெறிச்செங் கோல்கொள்ள
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—அமிர்தலிங்கம், ஆண்டார்பந்தி.

24 துடிக்கும் இதயத்தை துப்பாக்கி குண்டு
வெடித்துப் பிளந்தாலும் வீரம்— மடியாது
பற்றுவைத்த நற்றமிழைப் பார்புகழச் செய்துநான்
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

ஜே நாகராஜன், சென்னை-49.

25 பொய்யை எதிர்ப்பேன் புரட்டுக் களையொழிப்பேன்
மெய்யை மிகவிளங்கச் செய்திடுவேன்— வையகத்தின்
குற்றம் தவிர்ப்பேன் குறைதவிர்ப்பேன் நன்னெறிக்கே
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—அ. இளவழகன், ஆண்டார்பந்தி.

26 சாதி ஒழிப்போடு சன்மார்க்கம் காண்பதற்குப்
பாதித் தமிழரேனும் பங்குபெறும்— சேதிவந்தால்
முற்றிக் கிடக்கின்ற மூடத் தனமொழித்து
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

கவிஞர் 'கோன்'
வரகனேரி, திருச்சி-8

27 எங்கும் பொதுவுடைமை, இல்லையினி சாதிமுறை
தங்கும் மொழியுணர்வும் சார்ந்திட்டால்—பொங்கிவரும்
வெற்றுச் சடங்குகளை வேரறுத்து நன்மைபெற
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

—புலவர் க. கோபண்ணன்,
வரகனேரி - திருச்சி-8

28 நற்றமிழைக் கற்றவர்முன் கொற்றவரும் மற்றெவரும்
நிற்றலிலார் வெற்றொலிசெய் மற்றமொழிச்—சிற்றறிவர்
எற்றவரின் இற்றுவிழக் குற்றமற்ற சொற்றமிழில்
வெற்றிக் கொடிநாட்டு வேன்

ஆடற்கோ—சென்னை-7.

29 சாதிமத பேதங்கள் சாற்றும் சழக்கர்தம்
சூது மதிசெய்யும் சூழ்ச்சிகளை— மோதிவீழ்த்திப்
பொற்புசம நீதி பொலியவகை காண்பதிலே
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

கா. உ. கிருஷ்ணமூர்த்தி, சென்னை-1

30 நீதி யுரைப்பவர்கள் நேர்வழியில் சென்றுவிட்டால்
பாதி உலகமது பண்படுமே!— நாதியின்றிச்
சுற்றிக் கிடக்கின்ற துன்பக் கொடியறுத்து
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

திருமதி ஜி. சம்பூரணம், திருச்சி-8

31 மெய்ஞ்ஞானப் பண்புடனே மேலை யரின்கீர்த்தி
விஞ்ஞானம் சேர்கல்வி விந்தையுடன்—எஞ்ஞான்றும்
பெற்ற தமிழகத்தின் பேராண்மை பாரறிய
வெற்றிக் கொடிநாட்டு வேன்.

து. ம. இராமசாமி, கோவை-34.

✱ இக் குறியிட்ட வெண்பா ரூ 5 பரிசுபெறுகிறது.

சாலையோரத்திலே



மொட்டச்சி பூ கேக்கிரு!

"என்னுக்தா என்ன பண்ணரிக் கிட்டிருக்கிறே"

"கொஞ்சம் பூ வாங்கியாந்தேன். அந்தப் பூவை ஓங்க அக்கா கேட்டனுப்பிச்சிருந்தது. கட்டிக் குடுத்திட்டிருக்கறேன்"

"அக்கா பூ கேட்டுதா?"

"ஆமா! அதிலென்ன ஆச்சரியம்!"

"அவ மொட்டச்சியாகி முப்பது வருஷமாச்சு! இப்ப எதுக்கு பூ?"

"என்ன? கடவுள் இல்லே இல்லேன்னு சொல்றவங்க கோயிலுக்குள்ளாறெ போற உரிமை கேட்கலாம்கிறதுமட்டும் என்ன நியாயம்? மொட்டச்சி பூக்கேக்கிறதுங்கிறதும் நியாயம்தான்!"

"சாமி கும்பிடவா கோயிலுக்குள்ளே போறேங்கிருங்க?"

"பின்னே எதுக்காம்?"

"சாதியை ஒழிக்க?"

"சாதி கோயில்லமட்டுந்தானுயிருக்கு? அரசாங்கப் பணிமனைகளிலே இல்லையா? பத்திரிக்கைகள்ள இல்லையா? இங்கல்லாம் முதல்ல சாதி வேற்றுமையை ஒழிக்கட்டும்?"

"அப்படீன்னு, திருக்கோயிலிலே சாதி இருக்கட்டுங்கிறியா?"

"நான் ஒன்னும் அப்படிச் சொல்லலே! எங்க பேரவை மாநாட்டிலேயே "கருவறைக்குள் சென்று வழிபடும் உரிமை வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்கிறோம்!"

"அப்படீன்னு நீ என்னு சொல்றே!"

"கோயில்கள்ள-பேரவைசாதியை ஒழிக்கப் போராடட்டும். திராவிடக் கழகத்தினர் - அரசியலில், தேர்தலில், சமூகத்தில் நிலவும் சாதி வேற்றுமையை ஒழிக்க போராடட்டும் அதுவேநியாயம்."

"ஆமா! ஆமா! நீ சொல்றதும் சரிதான்!"

"பறம்புகிழார்"

தெளிவு

(இளங்கம்பன்)

பிறப்பை அளித்தவன் நீ
பேரருளைப் பொழிபவன் நீ
இறப்பை ஏன் படைத்தாய்
என்றுளைந்தேன்: இன்றுணர்ந்தேன்
பிறப்பில் விடுதலையைப்
பெறவன்றோ இறப்பீந்தாய்

இன்பத்தை ஈந்தவன் நீ
இணையற்ற பெரியோன் நீ
துன்பத்தை அளித்ததுமேன்
தூற்றியவன் இன்றுணர்ந்தேன்
துன்பத்தால் உன்னுடைய
தொடர்பு கொளவழிசெய்தாய்

நற்பயிரைப் படைத்தவன் நீ
நல்லுயிரைக் காப்பவன் நீ
முட்செடியை ஏன்படைத்தாய்
முரண்பட்டேன் இன்றுணர்ந்தேன்
நற்பயிரைக் காத்திட நீ
முட்செடியால் வேலியிட்டாய்.

அப்பரடிகளின்

அருளுருவப் பொலிவு

பெ. சுப்பிரமணியன் எம். ஏ.,

(ஒப்பற்ற ஓவியர் ஒருவரது கைவண்ணத்தைக் காண்போம்)

நம் கண்களால் காணப்படுகின்ற பொருள்களெல்லாம் நமக்கு இன்பம் பயப்பனவல்ல. நாள்தோறும் பல நிகழ்வுகளில் தோய்ந்து இன்பம் துய்க்கவே எண்ணுகின்ற இயல்புடைய நாம் கண்களுக்கு விருந்து நல்கும். கவினுள்ள பொருள்களையே காண விழைகின்றோம். மனம் விரும்பாத பொருள்களைக் காண நேரும்போது அவற்றை தம் மனத்தில் இருத்திக்கொள்ள மனிதன் விரும்புவதில்லை. ஆனால் கைபுனைந்தியற்றாக் கவின்பெறும் இயற்கை வனப்புக்களில் மனிதன் தன்னை மறந்து ஈடுபடும்போது அவ்வியற்கையை இனிதுநோக்கி அது தரும் இன்பத்தைத் துய்க்கிறான்; அதனையே நெஞ்சில் நிறைத்துக் கொள்கிறான். அதனழகில் ஈடுபட்டுத் தன்னை மறக்கிறான். தானும் அது ஆகிவிடுகிறான். இதுதான் கலைஞனியல்பு — கவிஞனியல்பு — பத்தனியல்பு.

பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவராம் — சைவப்பயிர் தழைக்கத் தோன்றிய சேக்கிழார் சிறந்த ஓவியக்கலைஞர்; காவியத்தையும் ஓவியமாகக் காட்டிய கவிநயம் நிறைந்த பாவலர்; பத்திமை வளரப்பாவியல் வடித்த பெரிய சிவபக்தர். அக்கலைஞர் அகக்கண்ணுற்கண்டு இன்புற்றுத் தாம்கண்ட இன்பவுருவை உள்ளக் கிழியில் எழுதிப் பின்னர்த் "திருத்தொண்டர் மாக்கதை" என்னும் திரைச்சீலையில், தமிழ்ச் சொல்லும் பொருளுமாகிய வண்ணமை கலந்து, தம் செந்நாவாகிய கையினால் பத்திமை யுணர்வாகிய துகிலிகை கொண்டு தீட்டிவைத்த உயிரோவியமே நாம் காண இருக்கும் ஓவியம் உணர்ந்து துய்த்தோமானால் நாமும் அதனழகில் ஈடுபட்டு நம்மை மறப்போம். இது உறுதி.

நம் அகத்தை அடக்கி ஒருமுகப் படுத்தி அகக்கண் கொண்டு காண்போமானால் அப்பரடிகளின் அழகு திருமேனியைக் காணலாம். அப்பொன்மேனியின் அருட்டோற்றமும் சிவவேடப் பொலிவும் நம்மை ஈர்க்கும் தன்மையை உணரலாம்.

தோற்றப்பொலிவு :-

அப்பரடிகள் "முழுநீறு பூசிய மேனியர்; வெண்ணீரணிந்து வெம்பவ மறுத்தவர். நீறு அழுக்கினைப்போக்கும். நீறு வெண்மையாயிருப்பது. வெண்மை தூய்மைக்கு இடம். அப்பர் அணிந்த வெண்ணீறு தூய வெண்ணீறு. வெண்மை நிறத்தைச் செல்வ

தால் வெளித்தோற்றமும் தூய்மை என்ற தன்மையைச் சொல்வதால் அகத்தோற்றமும் காட்டப்படுகின்றன. எனவே அப்பரடிகள் அகமும் புறமும் தூய்மையே வடிவானவர் என்பதைக் காட்ட வந்த சேக்கிழார் பெருமான் "தூய வெண்ணீறுதுதைந்த பொன் மேனி" எனக்காட்டினர். அப்பரது மேனி" அருள்வடிவான திருமேனி அழகும் அருமைப்பாடுடைய திருமேனி என்பதைக குறிக்கவே பொன்மேனி' என்றார்.

அப்பர் உருத்திராக்க மாலைகளை அணிந்திருக்கின்றார். கழுத்தில் மட்டும் அணியவில்லை தலை, தோள், மார்பு, கை முதலிய இடங்களிலும் (உருத்திராக்க வடம்) பூண்டிருக்கிறார் எம்பெருமானும் காண்கின்ற நாமும் விரும்பக்கூடிய உருத்திராக்க வடத்தை அப்பர் அணிந்திருக்கிறார். இதைக் காட்டவே 'தாழ்வடமும்' என்றார். (தாழ்தல் - தொங்குதல்.)

அப்பர் சிவனடியே சிந்திக்கும் செம்மையுள்ளத்தினர். தம்மைத் தலைவியாகவும் ஈசனைத் தலைவனாகவும் (நாயக நாயகி பாவம்) கண்டு அகத்துறைப் பாடல்களைப் பாடி மகிழ்ந்தவர் அப்பர். அவ்வுண்மையை மனத்துட்கொண்ட சேக்கிழார் அகத்துறை நயம்படக் காட்டுகின்றார். தலைவனது செந்நிறத்து அடிகளை இன்பத்தின் பொருட்டுத் தலைவி தன் செங்காந்தள் போன்ற மெல்விரல்களால் மெல்ல வருடுதல்போன்று, தம் மென்மையான மனத்தினில் தலைவனுகிய செம்மேனி யெம்மானின் சேவடிகளையே அன்புகசிய நினைக்கும் இன்ப சிந்தையுடையவர் அப்பர் ஆதலே "நாயகன் சேவடி தைவரு சிந்தையும்" எனப் பாடியதால் உணர்த்துகின்றார் சேக்கிழார்

அப்பர் நீர் பொழியும் கண்ணினர். உலகில் அழுவதுபோல் நடிப்பவர் பலருண்டு அவர்கள் உள்ளம் உருகி அழுபவரல்லர்; பயனை எதிர்நோக்கி நடிப்பவர்கள் ஆயின் அப்பரடிகள்

"நெக்கு நெக்கு நினைபவர்
நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப்
புண்ணியன்"

என்று பாடியவரன்றே. அடியவர்கள் சொல்ல முடியாத இன்பக்தினால் அகம் குளிர்ந்து கண்ணீர் பொழிவர். இஃது அப்பர் சிவபெருமான் சேவடியையே நினைப்பதால் இன்பம் அடைகின்றார்; அன்புமிக்குயரப்பெறுகின்றார். எனவே உள்ளிருந்து அன்புநீர் ஊற்றெடுத்துக் கண்வழி இடைவிடாது வெளிப்படுதலால் நீர்வழியும் கண்ணினராகினர் அன்புமீதூரப் பெற்றவர்தம் அன்பு மிகுதியை அவர் பொழியும் கண்ணீரே காட்டுமென்பதை வள்ளுவரும் "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்" என்ற குறளில் காட்டுகின்றார். அப்பரின் இந் நிலையை "நைந்துருகிப் பாய்வது போலன்பு நீர் பொழி கண்ணும்" எனச் சேக்கிழார் காட்டுகின்றார்

அப்பர் பரமனையே பாடுபவர்.

வாழ்த்த வாயும் நினைக்க
மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த
தலைவனை'' என்றும்

வாயே நீ வாழ்த்து கண்டாய்' என்றும் பாடியவர் அப்பர். பெருமான் உகந்து கேட்கின்ற செம்மையான தேவாரத் திருப்பதிகங்களை இடைவிடாது பாடிக் கொண்டிருக்கின்றமையால் அப்பர்தம் திருவாய் "பதிகச் செஞ்சொல் மேயசெவ்வாய்'' என்னுர். இத்தகும் எழில் தோற்றமுடைவர் எம்மை ஆளுடைய அரசு என்றும் தலைவர் என்றும் சேக்கிழார் பாடினர். இப்போது பாடலைக்கண்டு அப்பரடிகளின் உருவப் பொழிவைக் காண்போம்.

நூய வெண்ணீறு துதைந்த
பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே''

(பெரிய புராணம்-1405)

இப்பொழுது அப்பரின் தோற்றப்பொலிவைக் காண்கின்றோம். அகக்கண் அப்பொலிவின் ஈடுபட்டுத் துய்ப்பதால் நம் ஆணவம் அழிகிறது வேறு சிந்தனையும் பொழியுமற்ற நிலையில் அப்பரடிகளின் மலரடிகளில் நம் மனம் பதித்து வணங்குகின்றோம். வாழ்வு பெறுகின்றோம்.

தொண்டின் பொலிவு:

அப்பர் தொண்டினால் பெருமை யெற்றவர். அவர்தம் தொண்டு தான் அவருடைய தோற்றத்திற்குப் பொலிவைத் தந்தது. இன்று தோற்றத்தில் சிறந்தார் தொண்டிற் சிறந்தாராவதில்லை. வெளிவேடமே மிகுந்துவிட்டது தொண்டர்கள் இன்று அருகிவிட்டார்கள். தாம் வாழ உலகத்தைப் பயன் படுத்திக் கொள்ளுபவர்களே இன்று மிகுதி தம்மையிழந்து, தம்மைத் தியாகம் செய்துகொண்டு உலகம் வாழத் தாம் வாழும் தொண்டர்கள் இன்றில்லை. அப்பரடிகள் 'தொண்டர்கால் உயிர்க்கு ஊதியமில்லை' என்றும் 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்றும் பாடியவரல்லவா! பாடியவர்மட்டுமில்லை. வாழ்வையே உலகுக்காக, சிவத்தொண்டிற்காக ஒப்படைத்து தாம் பாடியதை நடைமுறைப்படுத்திய ஒப்பிலா உயர் தொண்டர்.

அப்பர் உழவாரப் படையினால் உயர்வு பெற்றவர். சேக்கிழார் பெருமான் அவரது தொண்டின் சிறப்பினை அழகுபடக் காட்டுகின்றார். கண்ணுதல்மேல் காதலாகிக் கசிந்து கண்ணீரைப் பெருக்குவதால் மார்பில் கண்ணீர் பொழிகின்ற காட்சி மழை வார்தலை போன்றிருந்தது. அத்தகைய திருமேனியையும், தம் இனிமை பொருந்தியவாக்கில் இனிய தமிழ் பதிகங்கள் சேர்கின்ற திருவாயையும், செம்பொற் சோதியாகிய இறைவனுடைய செம்மை பொருந்திய பொன்னார்ந்த திருவடிகளையே

சார்பாகப்பற்றிய திருமனமும் உடையவர்என்று அப்பரடிகளின் சிறப்பியல்புகளைச் சொல்லுகின்றார்.

அடுத்து, அப்பரடிகள் திரு உழவாரமாகிய ஒப்பற்ற படையினைக் கையிலேந்தி தாமும் அவ்வுழவாரப் படையுமே தனியாகி, இப்பரந்த உலகம் உய்யும் பொருட்டுத் திருவீதிகளைத் தூய்மைப்படுத்தும் பணிகளைச்செய்து பெருமான் திருவடிகளையே மனம் மொழி மெய்களால் பணிந்து ஏத்திப் பாடிப் பரவிச்செல்வார் என்று காட்டுகின்ற செழுந்தமிழ்ச் சேக்கிழார் பெருமான் பாடலைக் காண்போம்.

"மார்பாரப் பொழிகண்ணீர்
மழைவாருந் திருவடிவும்
மதுரவாக்கில்
சேர்வாகுந் திருவாயில்
தீந்தமிழின் மாலைகளும்
செம்பொன்தாளே
சார்வான திருமனமும்
உழவாரத் தனிப்படையும்
தாமுமாகிப்
பார்வாழத் திருவீதிப்
பணிசெய்து பணிந்தேத்திப்
பரவிச் செல்வார்"

(பெரிய புராணம்-1490)

அருளே வடிவாகிய அப்பரடிகளின் தோற்றப் பொலிவையும் தொண்டின் பொலிவையும் கண்டு உணர்ந்து இன்புறும் நாம் அவர் காட்டிய வழியில் நடக்கவேண்டும். நாடு செழிக்க நல்ல தொண்டர்கள் வேண்டும். எனவே அருளியல் தழைக்க அப்பரடிகளின் வழியில் பணிசெய்வோம்! வையம் வாழ நாம் வாழ்வோம்!

அருள்நெறிச் செய்திகள்

அருள்நெறித் தந்தை திருத்தாள் வணங்கி

க. சண்முகம் பணிவுடன் எழுதுவது.

மகா சந்நிதானம் ரூ. 21 அன்பளிப்புச் செய்து அறவுரை வழங்கியபடி குருவிகுளம் அருள்நெறி மன்றத்தார் இவ்வூரில்உள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் திருத்தொண்டு செய்துள்ளனர்

கோவிலைச் சுத்தம் செய்தும், வெள்ளையடித்தும்; ஆலயத்தி லுள்ள திருமேனிகள் அனைத்திற்கும் எண்ணெய்க் காப்பிட்டும், மகாபாரதச் சொற்பொழிவின் இறுதிநாளன்று சிறப்புவழிபாடுகளும் செய்துள்ளோம். அருள்நெறி அன்பர்கள் உடல் உழைப்பு நீங்க ளாக ரூ. 84-00 (ரூபாய் எண்பத்து நான்கு) திருத்தொண்டிற்காகச் செலவு செய்துள்ளோம்.

ஊர்ப் பொதுமக்கள் மகா சந்நிதானத்தின் வருகையால் ஆலயம் அடைந்துள்ள புதுப்பொலிவினைக் கண்டு மகிழ்ந்து பாராட்டினார்கள்.

அன்பன்

(ஒ-ம்) க. சண்முகம்

23—6—75 குருவிகுளம் நெல்லைமாவட்டம்

கண்களின் எல்லை, கால்நடைகளின் எல்லை

கருத்துக்களின் எல்லை, மனிதனின் எல்லை

குன்றக்குடி அடிகளார்.



மதுரை ஆதீனம் இளமைப்பட்டம் நியமனம்

சென்னையில் "தமிழ்முரசு" பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணியாற்றி வந்த திரு. கு. அருணகிரிநாதன், மதுரை ஆதீனம், திருஞானசம்பந்தர் மடாலயத்தின் இளவரசாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

30 வயது இளைஞரான திரு. அருணகிரி நாதன், ஆங்கிலத்திலும், தமிழிலும் பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் மிக்கவர் ஆவார்.

அத்துடன் எல்லோரிடமும் மனம் விட்டுப் பழகும் பண்பும், எதிலும் ஒரு துடிதுடிப்பும், நற்சிந்தனையும், சமயம், இலக்கியம், தத்துவம் ஆகிய துறைகளில் ஆழ்ந்த ஈடுபாடும் கொண்ட அவர், விடுதலைப் போராட்ட வீரர் திரு. ஆர். எம். குமாரசாமிப்பிள்ளையின் ஒரே புதல்வர் ஆவார்.

பத்திரிகை உலகில், திரு. அருணகிரிநாதனை அறியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். திரு. அருணகிரி நாதனுக்கு இப்போது இருக்கும் மதுரை ஆதீனம் 291 வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் நிர்வாண தீட்சையும் ஆச்சாரிய அபிஷேகமும் செய்வித்து, இளவரசுப் பட்டமளிப்பு விழாவைச் சிறப்புற நடத்தி வைத்தார்கள்.

இவ் விழாவைக் காண, மதுரை நகரிலிருந்தும் மற்றும் பல்வேறு ஊர்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு வந்திருந்தனர்.

தருமை ஆதீனம் 26 வது குரு மகா சந்நிதானம் அவர்கள் சார்பில், இளவரசு சுவாமிகளுக்கு பொன்னாடை போர்த்தி கவுரவிக்கப் பட்டது. அது போலவே குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனம் ஆகியவற்றின் சார்பில் பிரதிநிதிகள் வந்திருந்து இளவரசுக்கு தக்க மரியாதை செய்து சிறப்பித்தனர்

இளவரசுப் பட்டம் பெற்ற திரு. அருணகிரி நாதர் திருவுளச் சீட்டு மூலம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என்ற திருநாமம் சூட்டப் பெற்றார்கள். சுவாமிகள், அந்த ஆதீனத்தின் 292 வது பட்டம் ஆகிறார்கள்.

பட்டமளிப்பு விழாவை நடத்தி வைத்த பின்னர், ஆதீனத்தின் 291 வது குருமகா சந்நிதானம் அவர்கள் சுருக்கமாக உரையாற்றுகையில் "தாம் கடந்த 10 ஆண்டுக் காலமாக தகுதியுள்ள ஒரு இளவரசைத் தேடிக் கொண்டிருந்த தாகவும், வைத்தீசுவரன் கோயில் எடுத்த நாடி சாத்திரத் மூலமாக திரு அருணகிரி நாதரை தேர்ந்தெடுத்த தாகவும், தாம் வேண்டியபடியே திருவருள் ஒரு நல்ல இளவரசைத் தந்திருப்பதாகவும், ஆயிரக்கணக்கான பக்தர்களின் மத்தியில் ஆனந்தக் கண்ணீர் மல்க தெரிவித்தார்கள்.

பழமொழி:

சொல்லும் பொருளும்!

பேராசிரியர் வ. பெருமாள், எம்.ஏ., பி,டி., எம். ஆர். ஏ. எஸ்.
(உரிகம், கோலார், தங்கவயல் (K.G.F.) கருநாடக மாநிலம்)

(ஜனவரி இதழ் தொடர்ச்சி)

தமிழ் இலக்கிய வரலாற்றில் இடைக்காலத்தைச் சேர்ந்த ஔவையார் ஏறக்குறைய கி.பி. 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் தாம் இயற்றிய கொன்றை வேந்தனில் 'மூத்தோர்' சொன்ன (சொல்) வார்த்தை அமிர்தம் (75) என்று கூறியுள்ளார்.

'மூத்தோர் சொன்ன (சொல்) வார்த்தை' என்னும் சொற்றொடர்க்குப் பழமொழி என்னும் பொருள் கொள்ளலாம். ஆண்டிலும் அனுபவத்திலும் மூத்தோர் சொன்ன வார்த்தையே பழமொழியாகி விட்டது என்பது சொல்லாமலே விளங்கும். ஷேக்ஸ்பியர் வாசகம் ஆங்கிலத்தில் பழமொழியாகி விட்டதைப்போல ஔவையார் அமுத மொழியும் தமிழில் பழமொழியாகி விட்டது.

கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பர் பழமொழியை 'வழக்கு' என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றார். வழக்கு என்பதற்கு மக்களால் வழங்கப்படுவது என்றும், வழக்கில் உள்ளது என்றும் பொருள் கொள்ளலாம். உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய தொடர்களும் இவண் ஒப்பு நோக்கத்தக்கன.

தெருண்ட மேலவர் சிறியவர்ச்
சேரினும் அவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவர்
எனும் இது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்
உருள் உரைத்து உரைத்துஓடி
இருண்ட கல்லையும் தன்நிறம்
ஆக்கிய இரதம்

—கம்பராமாயணம்; பாலகாண்டம்; சந்திரசயிலப்படலம் அல்லது வரைக்காட்சிப்படலம்

தெளிந்த அறிவுடையோர் சிறியோரைச் சேர்ந்தாலும் அவருடைய இழிகுணத்தை மாற்றுவர் என்னும் பழமொழி கம்பர் பாடலில் அமைந்துள்ளது.

'புலி இருக்கக் குட்டியைப் பிடிக்க முடியாது' என்னும் பழமொழியைப் பயன்படுத்தி அதனை 'உரை' என்று குறிப்பிட்டுள்ளார். அவ்வுரை பொய்யாகுமா? என்று வினவுவதுபோலக் கம்பர் வாக்கு அமைந்துள்ளது.

'புல்தானை புறத்தாகக்
குட்டிகோட் படாதென்னும்
ஒலியாழி உலகுரைக்கும்
உரை பொய்யோ'

—கம்பராமாயணம்; ஆரணிய காண்டம்; 5: சூர்ப்பணகைப் படலம்; 101

பழமொழியைக் குறிப்பிடக் கம்பர் 'உரை' என்னும் சொல்லைப் பயன் படுத்தியுள்ளது இவண் கருத்தில் கொள்ளத்தக்கது.

'பாம்பறியும் பாம்பின்கால்' என்னும் பழமொழியைத் தம் பாட்டில் மேற்கோளாகக் காட்டிப் பழமொழி என்னும் சொல்லையும் பயன்படுத்தியுள்ளார்.

"காம்பு உறழும் தோளாளைக் கைவிடீர்
என்னினும்யான் மிகையோ கள்வர்
ஆம்பொறியில் அடல் அரக்கர் அவரோடே
செருச்செய்வான் அமைந்தி ராகில்
தாம்பொறியிற் பலமாய்ந் தரும் பொறிகள்
அறிந்து அவற்றைத் தடுப்பேன் அன்றே
பாம்பறியும் பாம்பின்கால் எனமொழியும்
பழமொழியும் பார்க்கி வீரோ"
கம்பராமாயணம்: ஆரணிய காண்டம்: 5 சூர்ப்பனகைப் படலம். 139

இந்திரசித்தன் அரண்மனையைக் காவல்புரிந்த அரக்கர்கள் பழமொழிகள், நெடுங்கதைகள், விடுகதைகள் ஆகியவற்றைச் சொல்லிக் கொண்டே பொழுது போக்கினர் கள் என்று கம்பர் இயம்புகின்றார். பழமொழியை மூதுரை என்று பெரியாழ்வார் குறிப்பிட்டிருப்பது போலக் கம்பரும் குறிப்பிட் டுள்ளது நோக்கத்தக்கது.

ஏதி ஏந்திய தடக்கையர் பிறையெயிறு இலங்க
மூதுரைப் பெருங் கதைகளும் பிதிர்களும் மொழிவார்
ஓதி லாயிரம் ஆயிரம் உணர்விலி அரக்கர்
காது வெஞ்சினக் களியினர் காவலைக் கடந்தான்
—கம்ப ராமாயணம்: சுந்தர காண்டம்: ஊர்தேடு படலம் 139

'வடநூற் கடலை நிலைகண் டுணர்ந்த சேனாவரையர்' கி. பி. 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் தொல்காப்பியச் சொல்லதிகாரத் திற்கு இவர் எழுதியுள்ள உரையில் தொன்னெறி மொழிக்கு (தொலகாப்பியம்: சொல்லதிகாரம்: எச்சவியல்: 53 முதுசொல்லாகிய செய்யுள் வேறுபாட்டின்கண் இயைபில்லன இயைந்தனவாய் வருவனவும் என்றவாறு" என்று உரை எழுதி 'ஆற்றுள் செத்த எருமையை ஈர்த்தல் ஊர்க்குய வர்க்குக் கடன்' என்னும் பழமொழியை மேற்கோள் காட்டியுள்ளார். இப்பழமொழி சேனாவரையர் காலத்தில் பெருவழக்கில் இருந்திருக்கலாம்.

கி. பி. 14—ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 'உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்' என்னும் புகழ் பெற்ற உரையாசிரியர் நச்சினார்க்கினியர். இவர் இதே தொல்காப்பிய நூற்பாவிற்குத் 'தொன்னெறிமொழி' என்னும் சொல்லிற் குச் சொல்லிடத்துப் பழைய நெறி யானும்வரும் சொல்லும் என்று உரை எழுதி அவர் காலத்தில்

வழக்கில் உள்ள 'ஆட்டுளான் இன்னுரை தாரான்' என்னும் பழமொழியை மேற்கோளாகக் காட்டியுள்ளார். இடையன் எழுத்தொடு இயையாத பொருள் உணர்த்தும் மொழியைப் பேசுவானேயன்றி எழுத்தொடு இயைந்த மொழியைப் பேச மாட்டான் என்பது இப் பழமொழியின் பொருள். அதாவது இடையன் எழுப்பும் ஒலி பொருள் உணர்த்தும். அப்பொருள் ஆட்டுக்கு விளங்கும் ஆனால் அவ்வொலியை ஏட்டில் எழுதிக்காட்ட இயலாது. நச்சினார்க்கினியர் தாம் சீவக சிந்தாமணிக்கு இயற்றிய உரையில் பழமொழியைப் 'பலவார்த்தை' என்னும் சொல்லால் குறிப்பிட்டுள்ளார்.

—சீவகசிந்தாமணி: 4: குணமாலையார் இலம்பகம்: 909.

தமிழில் பாரதம் பாடியவர்களுள் ஒருவர் வில்லிபுத்தூரார். இவரது காலம் கி. பி. பதினன்காம் நூற்றாண்டு. தன் நிலத்தில் குறுமுயல் யானையைவிட வலியது என்னும் பழமொழியை வில்லிபுத்தூரார் தாம் யாத்த பாரதத்தில் மேற்கோளாக எடுத்துக்காட்டி அதனைப் பழமொழி என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

தன் நிலத்தினில் குறுமுயல்
தந்தியின் வலிது என்று
இந் நிலத்திலில் பழமொழி
அறிதி நீ; இறைவ
எந்நிலத்திலும் உனக்கு
எளிதாயினும் இவர் நம்
நன்னிலத்தில் வர அமர்
தொடங்குதல் நன்றல்
–வில்லிபாரதம்:4 விராடபருவம்4
நிரைமீட்சிச் சருக்கம்: 50

விடுமன், துரோணர், துரியோதனன் முதலியோரை நோக்கி விதுரன் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. விதுரன் கூற்றும் அமைந்துள்ள இப்பாடலில் ‘தன் நிலத்தினில் குறுமுயல் தந்தியின் வலிது’ என்னும் பழமொழி சிறப்பிடம் பெற்றிருக்கின்றது. வில்லிபுத்தூரார் காலத்தில் இப்பழமொழி பெருவழக்கில் இருந்திருத்தல் வேண்டும் என்று கருத இடம் உண்டு.

‘வாக்கிற்கு அருணகிரி’ என்று புகழ்பெற்ற அருணகிரிநாதர் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் தாம் இயற்றிய திருப்புகழில் திருக்குறளைப் பழமொழி என்று பாராட்டியுள்ளார். ‘படர்புவியின் மீது’ என்று தொடங்கும் பாடலில்

‘திருவள்ளுவ தேவர் வாய்மை
என்கின்ற பழமொழியை
ஓதியே உணர்ந்து’

என்னும் பகுதி இடம்பெற்றுள்ளது.

–திருப்புகழ்: திருச்செந்தூர்: 53.

கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த படிக்காசுப் புலவர் தாம் இயற்றிய தண்டலையார் சதகத்தில் (பழமொழி விளக்கம்) பழமொழி என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

‘இசைந்த பழமொழி விளக்கம்
இயம்பத்தானே
விளங்கு பழமொழி விளக்கம்
அறிந்து பாட’
பரவு பழமொழி விளக்கம்
பரிந்து கூறல்
–தண்டலையார் சதகம்: காப்பு:
அவையடக்கம்

கி பி, 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முத்தப்பச்செட்டியார் பழமொழியை அடிப்படையாகக் கொண்டு தாம் இயற்றிய செயங்கொண்டார் சதகத்தில் பழமொழியைப் பழமைச்சொல் என்று குறிப்பிட்டுள்ளார்.

சீர்பொருந்தும் தென்னேமர்
செயங்கொண்ட
சோழீசர் திருப்பேர் வாழ்த்திப்
பார்பொருந்துங் குறுவிருத்தப்
பாமாலை
தனிலுலகப் பழமைச் சொல்லை
ஏர்பொருந்துஞ் செந்தமிழால்
யான் பாடப்

புவியிலுளோர் இசைந்து
கேட்கக்
கார்பொருந்துந்துதிக்கரத்தான்
வெயிலுகந்த
கணபதிதான் காப்புத்தானே.
-செயங்கொண்டார் சதகம்; காப்பு.

கி. பி. 18-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தவர் குருபாததாரர். அவர் தாம் இயற்றிய குமரேச சதகத்தில் ஒரு பழமொழியை மேற்கோளாகக் காட்டி அதனை உலகமொழி (91) என்று குறிப்பிட்டுள்ளார். உலக மொழி என்பதற்கு உலக மக்க ளிடையே வழங்கி வருவதும் உலக மக்கள் அனைவர்க்கும் பொருந்து வதுமான மொழி என்று பொருள் கொள்ளலாம்.

கி. பி. 18-ஆம் 19-ஆம் நூற் ருண்டைச் சேர்ந்தவர் மாதவச் சிவஞான யோகிகள். அவர் இயற்றிய நூல் சோமேசர் முது மொழி வெண்பா. 'ஒவ்வொரு வெண்பாவின் முற்பகுதி கதையை யும் பிற்பகுதி திருக்குறளையும் கொண்டு இவர் காப்புச் செய்யுளில், திருக்குறளை முது மொழி என்று குறிப்பிட்டிருக் கின்றார். எனவே, முதுமொழி என்பது தொன்றுதொட்டு வரக் கூடிய பொருள் பொதிந்த மொழி அனைத்தையும் குறிக்கும் என்பது தெளிவாகின்றது.

மதுவளரும் பூஞ்சடிலம்
மல்குசோமேசர்
முதுமொழி வெண்பாவை
மொழியப்-பொதுவு
மடம்பிடுங்கி அன்பர்க்கு
வான்விடு அளிக்கும்
கடம்மொழி முக்கண் களிறு'
-சோமேசர் முதுமொழிவெண்பா
(காப்புச் செய்யுள்)

சோமேசர் முதுமொழி வெண்பா விற்கு உரைஎழுதிய வா. மகாதேவ முதலியார் முதுமொழிக்குக் கீழ்க் கண்டவாறு உரை எழுதியுள்ளார்: முதுமொழி என்பது பண்புத் தொகை நிலைத்தொடர். முதுமை யாகிய சொல் என விரிதலின் (முதுமை பழைமை) ஈண்டு இத் தொடர் திருக்குறட்பாவினைக் குறித்தமையின் அடையடுத்த சினையாகுபெயர் என்றுதல் பண் புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை என்றுதல் இலக்கணம் கூறும்.

ஔவையார் பழமொழியை 'மூத்தோர் சொன்ன வார்த்தை' என்று குறிப்பிட்டிருப்பது போல 18-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி யில் வாழ்ந்த உலகநாதர் தாம் இயற்றிய நீதி நூலாகிய 'உலக நீதியில்' மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம் (பாட்டு-6) என்று பழமொழியை மூத்தோர் சொல் வார்த்தை என்று குறிப்பிட்டிருக்கிறுர். சிற்றம்பல பண்டாரம் தாம் இயற்றிய மகாபுராணத்தில் பழமொழியை மூதுரை என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றுர்.

'மூத்தியின் மாண்மேற் பொலிவா
மூதுரைப்
பத்தியின் தானமே பலிக்க
வேண்டுமால்'
-மகாபுராணம்: 27.

நீதிவெண்பா, ஆசிரியர் 'மூதுணர்ந்தோர் சொன்ன சில அறிவு மொழிகளை அறிவிற் சிறியேனாகிய நான் நீதிவெண்பா என்னும் நூலாக இயற்றுவேன்' என்னும் பொருள்பட நீதிவெண்பா காப்புச் செய்யுளில் பாடியுள்ளார்.

மூதுணர்ந்தோர் சொல்லாகிய பழமொழியை மூதுரை என்று இங்குக் குறிப்பிட்டுள்ளார்.

'மூதுணர்ந்தோர் ஓது சில
மூதுரையைப் பேதையேன் நீதி
வெண்பாவாக நிகழ்த்துவேன்.
ஆதிபரண் வாமான் கருணை மணி
யுதரம்பூத்தமுதற் கோமான்பெருங்
கருணை கொண்டு'

-நீதி வெண்பா காப்புச்செய்யுள்.

பழமொழி கதையைப் போலவும் கதையை அடிப்படையாகக் கொண்டும், கதையின் திரண்ட கருத்தாகவும், கதையின் சாரமாகவும், கதையின் தலைப்பாகவும், கதை உணர்த்தும் நீதியாகவும் விளங்குவதால் பழமொழிக்கு உபகதை என்னும் பெயரும் உலக வழக்கில் உண்டு. பழமொழி இறைமொழியைப் (வேதவாக்கு) போல அமைந்திருப்பதால் அதைச் சுலோகம் என்று சொல்வதும் உண்டு. பொதுமக்களுக்குப் பழமொழியே வேதம். சொலவடை வசனம் முதலிய சொற்களும் பழமொழியை எழுதா இலக்கியம், வாய்மொழி இலக்கியம் எழுதாக் கிளவி, கேள்வி (காதால் கேட்கப் படுவது) சுருதி என்று இவ்வாறெல்லாம் குறிப்பிடுவது உண்டு. தமிழ்ப் பழமொழிகளில் பல நீதியாக அமைந்திருப்பதால் 'நீதிமொழி' என்று சொல்லுவதும் உண்டு. பழமொழி கிறித்துவ சமயத்துறையில் நீதிமொழி என்று வழங்கப்படுவதும் இவண் நோக்கத்தக்கது. இதுகாறும் பழமொழியின் பல்வேறு பெயர்களை இலக்கியத்துணைகொண்டும் இலக்கிய வழி நின்றும் ஆராய்ந்தோம். இனி நிகண்டுகொண்டு ஆராய்வோம்.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திவாகர முனிவரால் இயற்றப்பெற்ற நிகண்டுக்குச் சேந்தன் திவாகரம் என்று பெயர். அவர் காலத்தில் பழமொழியைக் குறிக்க ஏழு பெயர்கள் இருந்தன என்பதைச் சேந்தன் திவாகரத்தின் வாயிலாக அறியலாம். அவையாவன:-

1) பழமொழி 2) மூதுரை 3) முதுமை 4) மொழிமை 5) முன்சொல் 6) முதுசொல் 7) பழஞ்சொல்.

–சேந்தன் திவாகரம்: 10: ஒலிபற்றியபெயர்த்தொகுதிமூதுரையின் பெயர்.

கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிங்கல முனிவர் தாம் இயற்றிய பிங்கல நிகண்டில் பழமொழிக்குரிய வேறு பெயர்களைப் பின்வறுமாறு குறிப்பிட்டுள்ளார்.

'மொழிமை, மூதுரை, முன்சொல்
பழஞ்சொல், முதுசொல் என்பர்
பழமொழியுமாமே'

–பிங்கல நிகண்டு (பிங்கலந்தை) 7: பண்பிற் செயகின் பகுதிவகை: 4 வாய்வகை: 2025.

கி. பி. 15–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மண்டல புருடர் தாம் இயற்றிய சூடாமணி நிகண்டில் பழமொழிக்குரிய வேறு பெயர்களைக் கீழ்க்காணும் நூற்பாவில் குறித்துள்ளார்.

"மொழிமை மூதுரை முன்
சொல்லுமுது சொல்லும்
பழஞ்சொல்லும் பழமொழி
முதுமையாகும்"

–சூடாமணி நிகண்டு: பக்கம் 209

கி. மு. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல்காப்பியர் காலந்தொட்டு 20–ஆம் நூற்றாண்டு வரையுள்ள 2700 ஆண்டுகாலத் தமிழ்மொழியிலுள்ள பழமொழியின் பெயர்களை ஆராய்ந்தால் பழமொழியைக்குறிக்க 1) பழமொழி 2) தொன்னெறிமொழி 3) முதுமொழி 4) முதுசொல் 5) தொன்றுபடுகிளவி 6)தொன்றுபடுபழமொழி 7) வாய்மொழி 8) அறம் 9) நெடுமொழி 10) பல்லவையோர் சொல் 11)பண்டைப்பழமொழி 12) செலவு 13 மூதுரை 14) பழஞ்சொல் 15) மூத்தோர்சொல் வார்த்தை 16) வழக்கு 17) உரை 18) பழைய நெறியானுய் வரும்சொல் 19) பழவார்த்தை 20) உலக மொழி 21) உபகதை 22) சுலோகம் 23) சொலவடை 24) வசனம் 25) எழுதா இலக்கியம் 26) வாய்மொழி இலக்கியம் 27) எழுதாக்கிளவி 28) கேள்வி 29) சுருதி 30) நீதிமொழி 31) முதுமை 32) மொழிமை 33) முன்சொல் ஆகிய 33) பெயர்கள் (பழமொழி என்னும் பெயர் நீங்கலாக) அமைந்திருப்பதைக் காணலாம். மேலும் தமிழ் இலக்கண இலக்கியத்தைத் துருவி ஆராய்ந்தால் இன்னும் சில பெயர்களும் தென்படலாம்.

கடலைக்குறிக்க முந்நீர், ஆர்கலி, பரவை, ஆழி, புணரி, சாகரம், வேலை, சமுத்திரம் முதலிய பல பெயர்கள் இருந்தாலும் கடல் மட்டுமே பெருவழக்கில் இருப்பதைப்போலப் பழமொழி என்னும் பெயரே வேரூன்றி நிலைத்துவிட்டது.

தமிழ்மொழியில் பழமொழியைக் குறிக்கப் பல சொற்கள் இருப்பது போல ஆங்கிலத்திலும் உண்டு. பழமொழியைக் குறிக்கும் 'Proverb' என்னும் ஆங்கிலச்சொல் Proverbium என்னும் லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. பழங்கால ஆங்கிலத்திலும் இடைக்கால ஆங்கிலத்திலும் இச்சொல் 'Proverbe' என்று குறிக்கப்பெற்றது. பிரெஞ்சு மொழியிலும் அவ்வாறே இது இன்று குறிக்கப்படுகின்றது. இச்சொல்லை 'Pro'verbum (verb) என்று இரு பொருட் கூறுகளாகப் பிரிக்கலாம். Pro' என்பதற்குப் பதிலாக (பிரதிநிதியாக, மாற்றாக) என்பது பொருள். 'verb' என்பதற்குச் சொல் (வினைச்சொல்) என்று பொருள். அதாவது நீண்ட வாக்கியத்திற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லே பழமொழி என்பது proverb என்பதன் உட்பொருள் ஒரு சொல்லே போதும் என்பது லத்தீன் பழமொழி (verbum Sap-Latin) இதற்கு இணையாகத் தமிழில் 'நல்ல மாட்

டுக்கு ஒருகுடு, நல்ல பெண்ணுக்கு ஒருசொல்' என்னும் பழமொழி வழங்கி வருகின்றது.

ஆங்கில அகராதி பழமொழிக்கு (proverb) முதுமொழி (adage) ஒழுக்க விதி மெய்யுரை கோட்பாடு (maxim) மூதுரை (saying, old saying) உறுதி மொழி கட்டளை நீதிவாசகம் (precept) பழஞ்சொல் மணிமொழி நூர்பா (a phorison பொருள்மொழி (apohagon cpophthigm) பொது வழக்குச்சொல், பழியுரை (by word) முதலிய பல்வேறு பொருள்களைத் தருகின்றது. 'ptoverb' என்னும் ஆங்கிலப் பெயர்ச்சொல்லின் பெயரடையாக (adjective) proverbial என்னுஞ் சொல் அமைந்துள்ளது. இந்த பெயரடைக்கு (proverbial) வசைபெயர் எடுத்த (notoricus) வழக்கில் நடைமுறையில் உள்ள (current) ஒப்புக் கொள்ளத்தக்க (actncwledged) மறுக்க முடியாத (unquestioned) முதலிய பொருள் உண்டு பழமொழியைப் பற்றிய அறிவியல் ஆய்வுக்குப் பழமொழியியல் ((proverbiolgy) என்று பொருள் பழமொழி என்னுஞ்சொல்லுக்குரிய பல்வேறு பொதுப் பொருளையும், நுட்பப்பொருளையும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழித்துணை கொண்டு இவண் சுருக்கமாகக் கண்டோம்.



அன்பர் கடிதம்

பேரன்புடையீர்,

வணக்கம் தாங்கள் விடுத்த, 'தமிழ்நாடு தெய்விகப் பேரவை' சார்புடைய மழை வேண்டல் பிரார்த்தனையில் நானும் பங்குகொண்டேன். கூட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றமை கண்டு உள்ளம் பூரித்தேன், 26—3—75 புதன்கிழமை அரக்கோணத்தில் 4-30 மணி முதல் 5-30 வரை கல்மழை மெய்தது அதை தங்கள் பிரார்த்தனையின் பயனே என உறுதியாகக் கூறலாம், இம்மாதிரி பிரார்த்தனைகள் எல்லா மாவட்டங்களிலும் நடைபெற தங்களைப் பணிவுடன் வேண்டுகிறேன் இம்மாதிரியான முயற்சிகளுக்கு என்னுடைய ஒத்துழைப்பு என்றும் தங்களுக்கு உண்டு,

அன்பன்

(ஒ-ம்) எம். எஸ். இளங்கோ

முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்

சென்னை—1

வேலி பயிரைப் பாதுகாக்கும்;

விதிகள் மனிதனைப் பாதுகாக்கும்

குன்றக்குடி அடிகளார்.



வெண்பாப் போட்டி-29

ஈற்றடி: நாட்டின் நலிவகலும் நாள்

முடிவு தேதி 10-7-75

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் : **"தமிழகம்"**

குன்றக்குடி,(623206) முகவை மாவட்டம்

காரைக்குடி தி சௌத் இந்தியா பிரஸில் அச்சிட்டவர் : வீர. சுப்பையா B. Sc., வெளியிட்டவர் : மு. காளியப்ப பிள்ளை ஆசிரியர், பாறைத் தெரு, குன்றக்குடி. (623206)

உ

அருள்மிகு சண்முகநாத சுவாமி திருக்கோயில்
குன்றக்குடி



திருப்பணி வேண்டுகோள்

அறுபடை வீடுகளில் குன்றுதோருடல் **குன்றக்குடி**; அருணகிரி நாதர் கனிந்து திருப்புகழ் பாடிப் பேரருள் பெற்றது **குன்றக்குடியில்**. வீரமருதுபாண்டியரின் பிளவை நோய் நீக்கியருளியதும் **குன்றக்குடி**. கண்கண்ட தெய்வம்—பிணியெல்லாம் தீர்க்கும் பெருமான் – பிடியெலாம் களையும் எந்தை முருகன் அறுமுகச் செவ்வேள் நந்தம் குடிமுழுதும் குல தெய்வமாக எழுந்தருளியுள்ள குன்றக்குடி சண்முகநாத சுவாமி திருக்கோயில் திருப்பணி நடைபெற்று வருகிறது. அன்பர்கள் அனைவரும் திருப்பணிக்கு நன்கொடை வழங்கி உதவும்படி கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர்.

பரம்பரை அறங்காவலர்,

அருள்மிகு சண்முகநாதசுவாமி திருக்கோயில்
பிரான்மலை வகை ஐந்துகோயில் தேவாலயம்
குன்றக்குடி. (இராமநாதபுரம் மாவட்டம்)